குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.29/2023

எ.ம.சா. 1

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10–ம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவி | தொழில் | |
| கணவர் பெயர் | சின்னகுழந்தை | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.55 மணி,

Complainant Ambika present. Advocate Mr.Vasanth present for Advocate Mr.Murugan present Complainant. Accused Devi present. Advocate Mr.Arumugam present for Advocate Mr.G.Prabu present for Accused.

**முதல் விசாரணை :**

1. அம்பிகா என்பவர் என்மீது காசோலை மோசடி வழக்கு தொடர்ந்துள்ளார். அதற்கு எதிராக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு 20 காசோலைகளை குப்பாயி என்பவரிடம் எனக்கு ரோஜா மகளிர் சுயஉதவிக்குழுவில் லோன் வாங்கி தருவதாக கேட்டதால், கொடுத்தேன். அதன் பின்னிட்டு எந்த லோனும் இதுவரை வாங்கி தரவில்லை. 2019 ஆம் ஆண்டு எனது வீட்டு பத்திரத்தை குப்பாயி மற்றும் புகார்தாரர் வாங்கி வைத்துக் கொண்டு, வட்டியில்லாமல் லோன் வாங்கி தருவதாக வாங்கிக் கொண்டனர். அதன்பிறகு, 3 வருடங்களாக லோன் வாங்கி தராமல் என்னை அலையவிட்டார்கள். அதற்காக சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தேன். அதன் அடிப்படையில், கொங்கணாபுரம் காவல்நிலையத்தில் எங்களை அழைத்து பேசியதன் அடிப்படையில் குப்பாயி மற்றும் புகார்தாரார் என்னுடைய பத்திரத்தை திருப்பி கொடுத்தார்கள். 2020 ஆம் ஆண்டு முதல் புகார்தாரருக்கும், எனக்கும் எந்த பேச்சுவார்த்தையும் இல்லை. எனவே, 2022 ஆம் ஆண்டு புகார்தாரர் எனக்கு பணம் கொடுத்ததாக சொல்வது முற்றிலும் பொய்யாகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.05 மணி.

Sd/.S.Sadhamhusain,
Judicial Magistrate, Fast Track Court, Omalur.